# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

**2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி**

(2017. 11. 20 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)

# ஆயிஷா கல்வி நம்பிக்கைப் பொறுப்பு (கூட்டிணைத்தல்)

(தனியார் உறுப்பினர் சட்டமூலம்)

**ஆயிஷா கல்வி நம்பிக்கைப் பொறுப்பைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ கே. காதர் மஸ்தான் அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 18.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**ஆயிஷா கல்வி நம்பிக்கைப் பொறுப்பு (கூட்டிணைத்தல்)**

## ஆயிஷா கல்வி நம்பிக்கைப் பொறுப்பைக் கூட்டிணைப்பதற் கானதொரு சட்டம்

*முன்னுரை.*

"ஆயிஷா கல்வி நம்பிக்கைப் பொறுப்பு" என அழைக்கப்படுவதும், அறியப்படுவதுமான நிறுவனமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட நிறுவனத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும், கருமங்களையும்பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும்நோக்கத் துக்காக இலங்கையில் இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாத லாலும்:

அத்துடன் சொல்லப்பட்ட நிறுவனம் எந்தப் பல்வேறு குறிக் கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இது காலவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித் துள்ளதாதலாலும், சொல்லப்பட்ட விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1**. இச்சட்டம், 2017 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, ஆயிஷா கல்வி நம்பிக்கைப் பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*ஆயிஷா கல்வி நம்பிக்கைப் பொறுப்பைக் கூட்டிணைத்தல்.*

**2**. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "நிறுவனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஆயிஷா கல்வி நம்பிக்கைப் பொறுப்பின் தற்போதைய உறுப்பினர் களாகவுள்ள அல்லது இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக, இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதன கத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ''ஆயிஷா கல்வி நம்பிக்கைப் பொறுப்பு'' என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட

2-PL 010379-300 (2017/10)

ஒரு குழுவாதல் வேண்டும்; அத்துடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்; அத்துடன் அது பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அது அதன்விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் உடையதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது :-

(அ) சமூக விஞ்ஞானம், இஸ்லாமிய கற்கை போன்ற துறைகளில் தாய்மை அபிவிருத்தியை மையப்பொருளாகக் கொண்டு மூன்றாம் நிலைக்கல்வியை வழங்கல்;

(ஆ) மாதர் வலுவூட்டல் மற்றும் குடும்ப அபிவிருத்தி போன்ற துறைகளில் குறுங்கால நெறிகளை வழங்கல்;

(இ) மாதரின் தலைமைத்துவ திறன்களை விருத்தி செய்தல்;

(ஈ) கல்வி - கலை சார்ந்த விடயங்களைப் பரப்புவதற்காக கருத்தரங்குகள், மாநாடுகள், செயலமர்வு, கலந்துரையாடல், விவாதங்கள், கலைக் கண்காட்சிகள் மற்றும் இது போன்ற நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல்;

(உ) புத்தகங்களையும் சஞ்சிகைகளையும் சேகரித்தல், அவற்றை தரப்படுத்தல், பிரசுரித்தல், பகிர்ந்தளித்தல்;

(ஊ) சமூகங்களுக்கிடையிலும் சர்வதேச மக்களுக்கிடையிலும் நல்லெண்ணத்தையும்புரிந்துணர்வையும்சகவாழ்வையும் உற்சாகமூட்டி வளர்க்கும் நோக்குடன் நிகழ்ச்சிகளையும் செயற்றிட்டங்களையும் முன்வைத்தல்;

(எ) க.பொ.த. (உயர்தர) பரீட்சைக்கான ஒரு கற்றல் நிலையமாக அமைதல்;

(ஏ) பிரதேசத்தில் காணப்படும் மூலப்பொருட்களைப் பயன் படுத்தி பெண்களுக்கு தொழிற் பயிற்சிகளை வழங்கல் ; அத்துடன்

(ஐ) மேற்கூறிய அனைத்து நடவடிக்கைகளையும் செயற்றிட் டங்களையும் முகாமைத்துவக்குழுவின் எந்தவொரு எழுதப்பட்ட சட்டங்களுக்கும் முரணில்லாதவாறு மேற் கூறப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்காக காரிய மாற்றல்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**4.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், அப்போதைக்கு வலுவிலிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய, அதன் விதிகளுக்கிணங்கத் தேர்ந்தெடுக்கப்படும் முகாமைச் சபையொன் றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைச்சபை இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு உடனடியாக நேர்முந்திய நாளன்று பதவி வகிக்கின்ற மன்றத்தின் முகாமைச் சபையாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.*

**5.** இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றின் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மையானதுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும், செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள், வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், செயற்படுத்தல், முடிவுறுத்தல் என்பவற்றுக்கும், பிணைப்பொறுப்பு டன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணம் கடன் பெறுவதற்கும் அல்லது திரட்டுவதற்கும், மானியக் கொடைகளை அல்லது நன்கொடைகளைப் பெறுவதற்கும் அல்லது சேகரிப்பதற்கும், அதன் நிதிகளை முதலீடு செய்வதற்கும், கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படும் ஏதேனும் கட்டிடத்தை அல்லது கட்டமைப்பை நிறுவுவதற்கும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்று வதற்குத் தேவையான அலுவலர்களையும், சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலையிலிருந்து நீக்கல் என்பவற்றுக்குமான தத்துவமும் அடங்கும்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

**6.** (1) ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மைகொண்டு, உறுப்பினர்களைச் சேர்த்தல், மீளப்பெறுதல் அல்லது விலக்குதல், முகாமைச் சபையைத்தேர்ந்தெடுத்தல், கூட்டுத்தாபனத்தின் பதவிதாங்குநர்கள், முகவர்கள், அலுவலர்கள், சேவையாளர்கள் என்போரின் கடமைகளை நடாத்துதல், அலுவல்களைக் கொண்டு நடாத்துவதில் கூட்டுத்தாபனத்தினாலும் முகாமைச் சபையினாலும் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறைகள், அத்துடன் பொதுவாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தலும் அதன் குறிக்கோள்களை எய்தலும் என்பவற்றுக்காக இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப்பட்ட அதேபோன்ற ஒரு கூட்டத்திலும் அதேபோன்ற முறையிலும் அவை மாற்றப்படலாம், திருத்தப்படலாம் அல்லது ஒழிக்கப்படலாம் அல்லது அவற்றுக்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

(2) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபன விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**7.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கொடை, விருப்பாவணம், நன்கொடை, அறுதி, சந்தாப்பணங்கள் அல்லது கட்டணங்கள் என்ற வகையில் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினால் தீர்மானிக்கவேண்டியவாறான ஒரு வங்கியிலோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளிலோ கூட்டுத்தாபனத்தின் வரவில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுகையில் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினை ஈடுசெய்வதற்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் நிதி மற்றும் ஆதனம் எந்த வகையிற் பெறப்பட்டாலும், இங்கே குறிப்பிடப்பட்டுள்ள கூட்டுத்தாப னத்தின் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கும் நிறைவேற்றுவதற்கும் மாத்திரமே பயன்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், இலாபத்தின் பகுதியாகவோ மிகையூதியம் என்ற வகையாகவோ அல்லது வேறு எவ்வகையாகவோ கூட்டுத்தாபனத்தின் உறுப்பி னர்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ செலுத்தப் படுதலும் அல்லது கைமாற்றப்படுதலும் ஆகாது.

*கூட்டுத்தாப னத்தின் கணக்குகளும் கணக்காய்வும்.*

**8.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டா தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது, அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் என்பன பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் பேரவையினால் நியமிக் கப்பட்ட ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

(4) இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது–

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருந்து, அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காள ரொருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளர்களுள் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக அல்லது சட்டத்தி னால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக இருந்து, அத்தகைய நிறுவகத்தி

னால் கணக்காளரொருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**9**. கூட்டுத்தாபனத்தின் இலட்சினையானது செயலாளரினது அல்லது சபையினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்டவாறாக சபை உறுப்பினர் ஒருவரினதும் பேரவையின் இன்னுமோர் உறுப்பினரினதும் முன்னிலையிலன்றி, எத்தன்மையினதுமான சாசனமெதிலும் பொறிக்கப்படுதலாகாதென்பதுடன், அவர்கள் தாங்கள் சமுகளித்ததற்கு அடையாளமாக அச்சாசனத்தில் தங்களது பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு ஒப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாக ஒப்பமிடுவதிலிருந்தும் தனிவேறானதாதலும் வேண்டும்.

உறுப்பினர்களின் பொறுப்பை வரையறுத்தல்.

**10**. கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரும், கூட்டுத்தாபனத்தின் தனிசுகளையும் பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்க்கும் நோக்கத்துக்காக அல்லது வேறேதேனும் நோக்கத்துக்காக, கூட்டுத்தாபனத்துக்கு அவரினாற் செலுத்தப்படற்பாலதான வருடாந்த ஒப்பப்பணத் தொகையை விஞ்சுகின்ற ஏதேனும் உதவுதொகையைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

நிறுவகத்தை கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக்கல்.

**11**. (1) இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்து -

(அ) நிறுவகத்தின் எல்லா அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனமும்;

(ஆ) நிறுவகத்தின் எல்லா உரிமைகளும், தத்துவங்களும், சிறப்புரிமைகளும், அக்கறைகளும் மற்றும் நிறுவகத்தின் எல்லாப் பொறுப்புக்களும் ; அத்துடன்

(இ) நிறுவகத்தின் எல்லாப் புத்தகங்களும், கணக்குகளும், ஆவணங்களும்.

கூட்டுத்தாபனத்துக்கு முழுமையாக உரித்தாதல் வேண்டும்.

(2) இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் (1) ஆம் உட்பிரிவின் பொதுமைக்குப் பங்கமின்றியும் –

(அ) நிறுவகத்துக்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படற்பாலவான ஒப்பப்பணங்களும் கட்டணங்களும் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்;

(ஆ) இச்சட்டம் தொடங்குவதற்கு நேர்முந்திய நாளன்று நிறுவகத்தின் எல்லாப் பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தின் பொறுப்புக்களாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(இ) இச்சட்டம் தொடங்குவதற்கு நேர்முந்திய நாளன்று நிறுவகத்தின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும் கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களாகவும் சேவையாளர்களாகவும் கருதப்படுதல் வேண்டும் ;

(ஈ) நிறுவகத்தின் நோக்கங்களுக்காகச் செய்து கொள்ளப்பட்டவையும், இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று உள்ளவையுமான எல்லா ஒப்பந்தங்களும், உடன்படிக்கைகளும் கூட்டுத்தாபனத்தினால் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களாகவும், உடன்படிக்கைகளாகவும் கருதப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(உ) நிறுவகத்தின் அல்லது நிறுவகத்திற்கெதிராக தொடுக்கப்பட்டவையும் இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று முடிவுறாதிருக்கின்றவையுமான எல்லா வழக்குகளும், சட்டவழக்கு நடவடிக்கைகளும் கூட்டுத்தாபனத்தினால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்ட சட்ட வழக்கு நடவடிக்கைகளாகக் கருதப்படல் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.

**12.** ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை அல்லது இறுதிவிருப்பாவணக் கையளிப்பின்மீது அல்லது வேறு வகையாகக் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக வரக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை, ஒன்றில் பயன்பெறும் சொந்தக் காரராக அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளராக அல்லது வேறு வகையாக எடுக்கவும், வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் ஆற்றலு டையதாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய எல்லா ஆதனங் களும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிக ளுக்கமையவும் அத்துடன் தொடர்புபட்ட கையாளுகைச் சாசனத்தின் ஏற்பாடுகளுக்கும், நிபந்தனைகளுக்கமையவும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற வில்லங்கத் துக்குட்படுத்த அல்லது பொறுப்பிக்கவுமுள்ள முழுத்தத்துவத்துடன் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனத்தினால் வைத் திருக்கப்படுதலும் வேண்டும்.

கலைப்பின் போது எஞ்சியுள்ள ஆதனம்.

**13.** கூட்டுத்தாபனம் கலைக்கப்படுவதன்மீது அதன் எல்லாக் கடன்களும் மற்றும் பொறுப்புக்களும் தீர்க்கப்பட்டதன் பின்னர் எத்தகையதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக் கப்படுதலாகாது. கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களைக் கொண்டதும் அல்லது கொண்டனவும், ஏதேனும் வருமானத்தை அல்லது இலாபத்தை அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிப்பதிலிருந்து விதிகளினால் தடைசெய்யப்பட்டதும் அல்லது தடைசெய்யப்பட்டனவுமான வேறு ஏதேனும் நிறுவகத்திற்கு அல்லது வேறு எவையேனும் நிறுவனங்க ளுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவகம் அல்லது நிறுவனங்கள் கூட்டுத்தாபனம் கலைக்கப்படுகையில் அல்லது அதற்கு நேர்முந்திய நிலையில் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.

**14.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்படுகின்றவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமை

கோருகின்றவர்களும் தவிர்ந்த வேறெவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட செயல்களுக்கான நட்டோத்தரவாதம்.

**15.** ஆள் எவரும் இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் சுமத்தப்பட்ட தத்துவங்களைப் பின்பற்றி அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளைக் கொண்டுநடாத்துகின்ற நோக்கத்திற்காக நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்படவேண்டுமென கருதப்படுகின்ற ஏதேனும் செயலுக்காக ஏதேனும் துடர்ச்சியில் அல்லது வேறு ஏதேனும் வழக்கு நடவடிக்கையில் பொறுப்பாளியாக மாட்டார்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**16.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.